**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

-----

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Sessions Case No. 58 of 2020**

**Deposition of witness for** : **PW21**

**Name** : **K.ராமமூர்த்தி**

**Father's / Husbend Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of August 2025.**

**எதிரிகள் 1,3 ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து கடந்த 30.04.2020 ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்போது ஓசூரில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 16.12.2018 ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது 15.12.2018 ம் தேதி எங்கள் காவல் நிலையத்தில் பணி புரிந்த சிறப்பு காவல் உதவியாளர் நடராஜன் என்பவர் அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி சென்று அங்கு சிகிச்சையில் இருந்த வாதி முருகன் இடம் புகார் வாக்குமூலம் பெற்று 16.12.2018 ம் தேதி விடியற்காலை 3

மணிக்கு நிலையம் வந்து அந்த வாக்குமூலத்தின் பேரில் நிலைய குற்ற எண் 589/2018 சட்டப்பிரிவுடன் 394, 397 IPC மற்றும் 25(1) (a) Indian Arms படி வழக்கு பதிவு செய்து அவர் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகார் வாக்குமூலத்தை குற்றவியல் நடுவர் ஊத்தங்கரை அவருக்கு அனுப்பியும் எனக்கு விசாரணைக்கு வைத்ததை அன்றைய தினமே காலை 3.30 மணிக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான ஊத்தங்கரை to அனுமன்தீர்த்தம்ரோடு வித்யாமந்தர் B.Ed கல்லூரி அருகே சென்று சம்பவ இடத்தை பார்வை இட்டேன். அங்கு ஒரு இரு சக்கர வாகனம் ரோட்டில் அருகே விழுந்து கிடந்தது. சம்பவ இடம் அது தான் என ஊர்ஜிதம் செய்து கொண்டு சம்பவ இடத்தில் போதிய வெளிச்சம் இல்லாததால் சம்பவ இடத்தை யாரேனும் கலைக்க நேரிடும் என்பதால் சம்பவ இடத்தை பாதுகாக்க காவல் நிலைய காவலர் 1785 பாலகிருஷ்ணன் என்பரை அறிவுரைக்கூறி அங்குபணி நியமித்து பின்பு இவ்வழக்கில் வாதியை சந்தித்து வாக்குமூலம் பெற தருமபுரி மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரிக்கு காலை 5 மணிக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ஆனந்தன் என்பவர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு குமாரமங்கலம் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்ற விவரத்தை தெரிந்துக்கொண்டும் பின்பு அங்கிருந்த மற்றும் காயமுற்ற ஒரு சாட்சி முருகன் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் அங்கு அவரருக்கு உதவியாக இருந்த அரசு மதுபானை கடை சூப்ரேசர் சுபாஸ் மற்றும் சிவக்குமார் மதுபானை கடை விற்பனையாளர் இளையராஜ் மற்றும் கோவிந்தராஜ் மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை தனிதனி யாக விசாரணை செய்து பின்பு இவ்வழக்கின் காயமுற்ற நபர் முருகன் என்பவர் தானும் தன்னுடன் காயமுற்ற ஆனந்தன் என்பவரும் அணிந்திருந்த துணிகள் இருந்தது. எடுத்த ஆய்வு செய்த ரத்த கரை படிந்த முருகனின் முழுக்கை சட்டை ஒன்று மற்றும் ஆனந்தனின் நீல கலர் டீ சட்டை வலது கை தீஞ்ச நிலையில் இருந்தது. வெள்ளை கலர் முண்டா பனின் வலது புறம் அல்லை பகுதியில் இரு சிறிய ஓட்டைகள் இருந்ததை என்னிடம் ஆஜர் செய்தார். அதை மருத்துவமனையிலேயே சாட்சிகள் கோவிந்தராஜ் மற்றும் இளையராஜா ஆகியோர் முன்னிலையில் சாட்சியாக வைத்து கைப்பற்றுதல் மகசரில் 06.35

மணிக்கு  கைப்பற்றினேன். பின்பு 06.45 முதல் 8 மணி வரை சாட்சிகளை விசாரணை செய்தேன்.  பின்பு அங்கிருந்து புறப்பட்டு 8.55 மணிக்கு சம்பவ இடம் வந்தடைந்து 9 மணி முதல் 10 மணி வரை சாட்சிகள்  குமரேசன் மற்றும் ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் கைப்பற்றுதல் மகசர் மாதிரி வரைபடம் இவைகளை தயார் செய்தேன்.  மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.த.சா.ஆ. 15 மற்றும் 16 ஆகும்.  நான் மருத்துவமனையில் கைப்பற்றிய வழக்கு சொத்தையும் சம்பவ இடத்தில் கைப்பற்றிய வழக்கு சொத்தையும் படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவங்கள்  முறையே 91 அ.த.சா.ஆ. 17 முதல் 23  வரை குறியீடு செய்யப்படுகிறது.  பின்பு சம்பவ இட சாட்சிகள் குமரேசன் மற்றும் ரமேஷ் , அப்புலு, பிரகாஷ், இளையப்பன் ஆகியோர்களை 10.30 மணி முதல் 12 மணி வரை விசாரணை செய்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.  விசாரணையின் தொடர்சியாக வழக்கில் சம்பந்தப்பட்ட டாஸ்மாக் கடைக்கு சென்று பார்த்ததில் அங்கு கடை திறக்கப்பட்டிருந்தது. அங்கு அருகில் இருந்த சூப்பர் ரைசர் சுபாஸ் உதவி சூப்பர்ரைசர் சிவக்குமார் சேல்ஸ்மேன்கள் இளையராஜா மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்த வாக்குமூலம் பதிவு செய்தேன்.  பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் நடராஜனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். டாஸ்மாக் கணக்காளர் மஞ்சுநாத் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.  நான் பதிவு செய்த வாக்குமூலங்கள் மற்றும் இதர ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.  பின்பு 17.12.2018 ம் தேதி சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக்கல்லூரி அலுவலருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதில் காயமுற்ற ஆனந்தன் என்பவரின் உடலிருந்து எடுக்கப்பட்ட பால்ரஸ் குண்டுகளை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டும் இந்த பணிக்கு காவலர் 1785 திரு. பாலகிருஷ்ணன் என்பவரை அனுப்பி வைத்தேன்.  அவர் மேற்படி மருத்துவமனைக்கு சென்று வேண்டுகோளை தெரிவித்துள்ள வழக்கு சொத்தை மருத்துவரிடம் பெற்று என்னிடம் வந்து ஆஜர் செய்ததை படிவம் 91 ன் படி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.  பின்பு 21.12.2018 ம்

தேதி சேலம் குமாரமங்கல அரசு மருத்துவமனைக்கு சென்று அங்குசிகிச்சையில் இருந்த ஆனந்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இந்த வழக்கின் எதிரிகள் கோட்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 20/2019 சட்ட பிரிவுகள் 397 IPC மற்றும் 27 Indian Arms Act படி மேற்படி காவல் ஆய்வாளர் கோட்டப்பட்டி அவர்கள் 18.02.2019 ம் தேதி கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டபோது அதில் எதிரிகள் பரதன் வயது 24 த/பெ நாகேஷ்வரன் ரெட்டிப்பட்டி கிராமம் ஊத்தங்கரை வட்டம் மற்றும் எதிரிகள் வெங்கட் (எ) வெங்கடேசன் வயது 32, த/பெ சின்னகண்ணு, கலைஞர் நகர், ஊத்தங்கரை ஆகிய இருவரும் இதற்குமுன்பாக 15.12.2018 ம் தேதி இரவு தண்ணீர் பந்தல் ஒயின் சாப் அருகில் நாட்டு துப்பாக்கி உடன் பல்சர் பைக்கில் வந்து டாஸ்க்மார்க் ஊழியர்களை சுட்டு ரூபாய் 3 லட்சம் கொள்ளைஅடித்ததாக கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் எனக்கு அதை தெரிவித்தனர். இதன் அடிப்படையில் நான் அன்றைய தினமே அங்கு சென்று விசாரித்து உண்மைதன்மையை தெரிந்து கொண்டேன். பின்பு மேற்படி எதிரிகளை கைது செய்ய விசாரிக்க கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பீட்டிவாரண்ட் கொடுக்கும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் படி நடுவர் அவர்கள் பீட்டிவாரண்ட் கொடுத்ததன் பேரில் மேற்படி எதிரிகளை நீதிமன்றத்தில் வழி காவல் மூலம் ஆஜர் செய்தேன். பின்பு மேற்படி எதிரிகளை ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண் 589/2018 விசாரிக்க வேண்டி 3 நாட்கள்போலிஸ் காவலில் விசாரிக்க ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் குற்றவியல் நடுவர் ஆணை வழங்கியதன் பேரில் மேற்படி எதிரிகள் இருவரையும் போலிஸ் காவலில் எடுத்து மேற்படி எதிரிகள் இருவரையும் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்தேன். அவர்கள் மேற்படி குற்ற எண்களில் சம்பந்தப்பட்ட குற்றத்தை செய்யததாகவும் தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் தருவதாகவும், தெரிவித்தன் பேரில் ஒப்புதல் வாக்குமூலம் பெற சாட்சிகளை அனுப்பி வைக்கும்படி வட்டார ஊத்தங்கரை அலுவலர்களுக்கு 24.02.2019 ல் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அவர் அவரிடத்தில் பணி புரியும் ஊத்தங்கரை கிராம நிர்வாக அலுவலர் திருஞானம் மற்றும் கிராம உதவியாளர் கோவிந்தராஜ் ஆகியோர்களை

அனுப்புவதாக தெரிவித்தார். இவர்கள் இருவருக்கும் சட்ட பிரிவு 160 கு.வி.முச படி அழைப்பாணை வைத்து அழைத்தேன். மேற்படி அவர்கள் இருவரும் காவல் நிலையம் வந்தனர். பின்பு விசாரணையின் போது போட்டோ மற்றும் வீடியோகிராப் செய்ய ஊத்தங்கரை அடுத்த வேடப்பட்டி கிராமத்தில் குடியிருக்கும் நடராஜன் மகன் வீரராகவன் சாய்ஸ்டுடியோ ஊத்தங்கரை என்பவரை புகைப்படம் எடுக்க வருமாறு அழைப்பாணை அனுப்பினேன். பின்பு இவர்கள் முன்னிலையில் எதிரி வெங்ட் என்ற வெங்கடேசன் என்பவர் தானாக முன் வந்து கொண்டு வந்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் 15.12.2018 ம் தேதி இரவு அவரும் அவருடன் பரதன் என்பவரும் வெப்பாலம்பட்டிக்கு அருகே உள்ள தண்ணீர் பந்தல் டாஸ்மார்க் கடையின் பணியாளர்கள் முருகன் மற்றும் ஆனந்தன் பணி முடித்து மதுபானம் விற்ற பணத்தை எடுத்து இருசக்கர வாகனத்தில் எடுத்து செல்லும்போது இவர்கள் இருவரும் நோட்டமிட்டு பரதன் பல்சர் வண்டியை ஓட்ட பின்னால் உட்கார்ந்து சென்று வெங்கட் என்ற வெங்கடேசன் தனது கையில் இருந்த நாட்டு துப்பாக்கியால் இருவரையும் சுட்டதில் கீழ விழுந்தவர்களிடம் இருந்த ரூ.2,90,830/- பணத்தையும் , மதுபான கடை சாவி மற்றும் கணக்குநோட்டு புத்தகம் இவைகளை கொள்ளை யடித்து சென்றதாகவும் தன்னை அழைத்து சென்றதாகவும் வழக்குசொத்துக்கள் மறைத்து வைத்துள்ள இடத்தை அடையாளம் காட்டியும் எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொன்னார். பின்பு இவருடன் சென்ற மற்ற எதிரியான பரதன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரை அழைத்து கொண்டு போனால் அவர் வீட்டின் அருகில் உள்ள கோழி கூண்டில் மறைத்து வைத்துள்ள நாட்டு துப்பாக்கி மற்றும் கரிமருந்து , தேங்காய் நார் , ஆரஞ்சு பொடி மற்றும் அவருக்கு கொள்ளையடித்த பணத்தில் செலவு செய்தது போக மீதம் இருந்தது போக 25,000 த்தை மற்றும் வெங்கடேசன் பயன்படுத்திய பைக் மற்றும் வழக்கு சொத்தான நோட் புக்கை எரித்த இடத்தையும் சம்பவத்திற்கு பயன்படுத்திய நாட்டு துப்பாக்கியை விலைக்கு கொடுத்த ஒப்பத்தவாடியை சேர்ந்த மகேந்திரன் என்பவரை அடையாளம் காட்டுவதாக தெரிவித்தார். இதன் பேரில் 25.02.2019 ம் தேதி காலை 10 மணிக்கு ஊத்தங்கரை கலைஞர்நகர் எதிரி வெங்கட்டு மெத்தை வீட்டிற்கு சென்று அவர்

அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்கள் (1) NH 100 Polaris precahcle Sports Air Gun cal 4.5 (177) Sl.No. AH 02975. (2) K. F 7.65 என்ற Pistal Rounds 4 . (3) இரும்பு பால்ரஸ் குண்டுகள் 3. (4) Double Head DIANA shot AIR RIPLE PELL ETS 100 No.1 (177) CAL 4.5 mm Long Rang திறக்காத நிலையில் 4 Box. ஆகியவற்றையும் பின்பு 11.40 மணிக்கு இதே எதிரி சென்னப்பநாய்கனூர் பழையாஊர் கொண்டம்பட்டி போகும் வழியில் உள்ள ஏரியை அடித்த புலையமரத்தில் கிழக்காக ரோட்டின் இடது புறத்தின் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த சிறிதளவு எரிந்த சாம்பல் மண். (2) பேக் ஜீப் ஒன்று (3) ஸ்டேபளர் ஒன்று . (4) 3 சாவிகள் கொத்தாக ( 2,3,4) தீயில் எரிந்து காணப்பட்டவை உடைந்த கால்குலேட்டர் துண்டுகள் இரண்டு ஆகியவை கைபற்றுதல் மகஜரில் சாட்சிகள் திருஞானம், கோவிந்தராஜ் இவர் முன்னிலையில் கைபற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு காலை 11 மணிக்கு ரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள எதிரி பரதன் என்பவரது சீமை ஓட்டு வீட்டின் முன்பு சென்று எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த சுமார் 61cm நீளம் உள்ள கட்டை மற்றும் இரும்பு குழலுடன் கூடிய நாட்டு துப்பாக்கி ஒன்று. மஞ்சல் ஆரஞ்சு நிறம் கொண்ட பவுடர் சிரிய பிளாஷ்டிக் குப்பியில் சுமார் 7.460 கிராம். கரிமருந்து சிறிதளவு பேப்ரில் சுற்றி வைக்கப்பட்டவை சுமார் 11.150 கிராம். (4) தேங்காய் நார் 13.850 கிராம். இரும்பு பால்ரஸ் குண்டுகள் 5 அதில் புதியது 2 பழையது 3. TN 07 BW 0619 TVS PHOENIX 125 Motor cycle. பணம் ரூ.25,000 ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைபற்றினேன். மேற்படி TVS 125 மோட்டார் சைகில் **சா.பொ.19** ஆகும். பின்பு மேற்படி விசாரணை மேற்கொண்டதை மேற்படி விசாரணையின் போது எடுக்கப்பட்ட sony DVD CD 2. போட்டோக்கள் 4 எடுத்து அதை நீதிமன்றத்தில் அனுப்பிவைத்தேன். பின்பு மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒப்பத்தவாடி சென்று அங்கு கதவு எண் 232 ல் குடியிருந்த சாம்மோடன் மகன் மகேந்திரன் என்பவரை எதிரிகள் அடையாளம்காட்ட கைது செய்து அவர் நாட்டு துப்பாக்கியை மேற்படி எதிரிகளுக்கு ரூ.8000 க்கு விற்றதையும் அவர்கள் கொள்ளை அடிக்க தான் வாங்கி கொண்டு சென்றார்கள் என்ற விவரம் தெரிந்து அவர்களுக்கு விற்றதையும் ஒப்புக்கொண்டு

தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலும் கொடுத்ததை சாட்சிகள் திருஞானம் மற்றும் கோவிந்தராஜ் முன்னிலையில் பதிவு செய்தேன் பின்பு 3 எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்வு இவ்வழக்கில் மேற்படி எதிரிகளுக்கு காவல் நிலையத்தில் எதிரிகளுக்கு விசாரணையின் போது பாதுகாப்பாக இருந்த காவலர்கள் நடராஜ், ராஜேந்திரன், ஏழுமலை இவர்களையும் இப்பணிக்கு என்னுடன் போலிஸ் வாகனத்தை ஓட்டி வந்த தலைமை காவலர் சரவணன் என்பவரையும் தட்டச்சு செய்த தங்கபால் என்பவரையும் போட்டோ கிராப்பர் பதிவு செய்த வீரராகவன் என்பவரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வீரராகவன் கொடுத்த போட்டோ மற்றும் வீடியோ சீடிகளை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்பு மேற்படி எதிரிகளை அடையாள அணிவகுப்பு முதன்மை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அந்த கடிதத்தின் அடிப்படையில் குற்றவியல் நடுவர் எண் 1 கிருஷ்ணகிரி அவர்கள் மேற்படி சாட்சிகளை சேலம் மத்திய சிறைக்கு அழைத்து ஆஜர் அடையாள அணிவகுப்பு நடத்தினார். பின்பு மேற்படி வழக்கில் கைப்பற்றபட்ட நாட்டு துப்பாக்கி மற்றும் தடயங்களை சேலம் மற்றும் சென்னைக்கு ஆய்வுக்காக நீதிமன்றத்தின் மூலம் அனுப்பிவைத்து அறிக்கை பெற்று இதன் பின்பு எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ய ஆணைபிறப்பிக்க கனம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரின் நடைமுறை ஆணைபெற்றேன். மேற்படி ஆணை **அ.சா.ஆ.24** ஆகும். பின்பு இவ்வழக்கில் சட்ட பிரிவு 25 (1A) – ARMS Act 394, 397 IPC என இருந்ததை 392, 397 IPC 25 (1B) (a), 27 (1) , 25(1) (a) ARMS Act ஆக மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றதிற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.25** ஆகும். பின்பு முதல் உதவி சிகிச்சை செய்த ஊத்தங்கரை அரசு மருத்துவர் திருமதி.விமலா என்வரையும் மேல் சிகிச்சை அளித்த சேலம் அரசு மோகனகுமார மங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவர் சுரேந்தர் அவர்களையும் சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் உதவி இயக்குனர் ஸ்ரீ வித்தியா சீனிவாசன் என்பவரையும் கோட்டப்பட்டி காவல் ஆய்வாளர் முரளி என்பவரையும் விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு குற்றவியல் இணைய இக்குனர் அவர்களிடம் கருத்துரை பெற்று ஆஜர் எதிரிகள் மீது 25.02.2020 ம் தேதி 392, 397 IPC 25 (1B) (a), 27 (1) , 25(1) (a) ARMS Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பதிவு செய்தவர்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். புகாரில் பாதிக்கப்பட்ட நபர் எதிரிகள் பற்றிய அங்க அடையாளங்கள் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. புகார் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டு எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றால் புகார் 1 மணிக்கு பதிவு செய்யப்பட்டு 3 மணிக்கு கவால் நிலையம் ஆஜராகி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் பதிவு செய்யும் போது ஆனந்தனிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. முருகனிடம் புகார் வாக்குமூலம் பெறும் போது ஆனந்தன் மயக்கநிலையில் இருந்தாரா அல்லது தெளிவான நிலையில் இருந்தாரா என்றால் மயக்கநிலையில் இருந்ததாக சொன்னார். ஆனந்தனிடம் இருந்து சான்று பொருட்கள் கைபற்றினேனா என்றால் இல்லை. ஆனால் ஆனந்தனின் சட்டையை முருகனிடம் கைபற்றினேன். என்னிடம் காட்டப்படும் டி சர்ட் மற்றும் முண்டா பணியன் ஆகியவை ஆனந்தனுடையதா என்றால் சரிதான். ஆனந்தனின் அல்லை பகுதியில் குண்டு பாய்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காயம் பட்ட நபர் தனக்கு அல்லை பகுதியில் குண்டு பாய்ந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. ஆனந்தனின் முண்ட பணியன் மற்றும் டி சர்ட் ஆகியவற்றின் அல்லை பகுதியின் தீந்ததாகவோ, துளை இருப்பதாகவோ இல்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி ஆனந்தன் வண்டியை ஓட்டி செல்லும் போது புகார் தாரர் முருகன் பின் பகுதியில் உட்கார்ந்து சென்றதாகவும் பின் பக்கமாக வந்த எதிரிகளில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதாக சாட்சிகள் கூறி உள்ளார்கள் என்றால் சரிதான். புகார் தாரர் முருகனுக்கு துப்பாக்கியால் சுட்டதில் வலது காதின் மேல் நுனி பகுதியில் காயம் ஏற்பட்டதாக சாட்சி சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் முன்பு செல்லும் நபர்களை பின்னால் இருந்து சுட்டால் பின்னால்

அமர்திருந்து முருகனின் வலது காதின் நுனி பகுதியின் காயம் ஏற்பட்டு இருந்தால் அவருக்கு முன்பு அமர்ந்து சென்ற ஆனந்தனுக்கு அல்லையிலோ அல்லது தோள் பட்டையிலோ துளைத்த காயம் வாய்ப்பு இல்லை என்றால் 3 பால்ராஸ் குண்டுகள் போட்டதாக விசாரணையில் தெரிகிறது மேற்படி 3 பால்ராஸ் குண்டுகளும் ஒரே திசையில் ஒரே நேர் கோட்டில் செல்ல வாய்ப்பு இல்லை. அவ்வாறு 3 குண்டுகள் அல்லது அதற்கு மேல் இருந்தாலும் கூட பின்னால் அமர்திருந்த நபரை தான்டி முன்பு அமர்ந்திருந்த நபருக்கு எந்த இடத்திலும் துளைத்த காயம் ஏற்படுவதற்கு வாய்பு இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறும் நேரம் இரவு நேரம் என்பதால் சம்பவ இடம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் கூறி உள்ளேன். கோட்டம்பட்டி காவல் நிலையத்தில் எதிரிகள் கொடுத்ததாக கூறும் ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சிகளாக இருந்த நபர்களை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. பாதிக்கபட்ட நபர் எதிரிகளின் அங்க அடையாளங்கள் பற்றி சொல்லாத பட்சத்தில் அடையாள அணிவகுப்பு நடத்த முடியாது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் என்து விசாரணையில் சாட்சிகள் எதிரிகளின் வயது மற்றும் அடையாளங்கள் பற்றி தெரிவித்துள்ளார். இந்த வழக்கில் இந்தி காரர்களை யாரேனும் விசாரித்தேனா என்றால் இல்லை. இந்தி காரர் போல் இருப்பதாக சொல்லியுள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் தமிழ் காரர்கள் என்றால் சரிதான். இந்தி காரர்களுக்கும் தமிழ் காரர்களுக்கும் ஒப்பிட்டு பார்த்தால் வித்யாசம் தெரியும் என்றால் சரியல்ல. அடையாள அணி வகுப்பு நடத்த செல்லும் போது விசார் அதிகாரியை தவிர வேறு யாரும் செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் ஜீப் ஓட்டுனர் வந்தார். அ.சா.ஆ. 1 மற்றும் 2 சாட்சிகள் அடையாள அணி வகுப்பிற்கு யார்ருடன் வந்தார்கள் என்றால் அவர்கள் தனியாக வந்தார்கள். சாட்சிகள் தனியாக வந்தார்கள் என்று கூறிப்பிடுவது பொய் என்றாலும் நாங்கள் தான் அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல. சாட்சிகளை நடுவர் அவர்களுக்கு அடையாளம் காட்டியது நான்தான் என்றால் சரிதான். துப்பாக்கியில் இருந்து சுடப்பட்டதாக சொல்லும் பால்ரஸ் குண்டுகள் சம்பவ இடத்தில் கைபற்றபட்டதா என்றால் இல்லை. மருத்துவமனையில் இரண்டு குண்டுகள் எடுத்த மருத்துவரிடம் வேண்டுகோள்

கடிதத்தின் பேரில் வழக்கிற்காக பெற்றேன். அடையாள அணி வகுப்பு நடத்து சமயத்தில் சாட்சிகள் எங்கள் பதுகாப்பில் இருந்ததால் அவர்களுக்கு எதிரிகளின் அங்க அடையாளங்கள் சொன்னதின் பேரில்தான் அவர்கள் அடையாளம் காட்டினார் என்றால் சரியல்ல. எதிரிகளை போலிஸ் காவலில் எடுத்த பின்பு தான் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது என்றால் சரிதான். எதிரிகள் போலிஸ் காவலில் இருந்த போது எதிரிகளின் அங்க அடையாளங்கள் மற்றும் போட்டோ எடுத்தும் சாட்சிகளுக்கு நாங்கள் சொன்னதின் அடிப்படையில் தான் அடையாள அணிவகுப்பு அடையாளம் காட்டினார்கள் என்றால் சரியல்ல. 3ம் எதிரி துப்பாக்கியை விற்றதாகவும் மற்ற எதிரிகள் அவரிடம் இருந்து வாங்கியதாகவும் கூறுவதற்கு முன்பு துப்பாக்கி சம்மந்தமான பரிவர்தனை சம்மந்தமாக எனது விசாரணையில் தெரியவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கொள்ளை போனதாக சொல்லும் தொகை தோரயாமக சொல்லியுள்ளார்கள் என்றாலும் அருதியிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. மது பான கடை ஊழியர் சாட்சிகள் அணைவரும் மது விற்பனைதொகை கடையில் எண்ணிபார்க்க மாட்டோம் என்றும் வீட்டில் வந்த பின்புதான் எண்ணி பார்ப்பதாக கூறி உள்ளார்கள் சரியல்ல. மதுபானகடை ஊழியர்கள் கடையிலேயே எண்ணி பார்த்த பின்பு தான் வீட்டிற்கு எடுத்து செல்வதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கடையில் எண்ணி பார்த்துவிட்டு தான் எடுத்து வந்திருந்தால் தோராயமாக என கூறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவது போலிஸ் காவலில் இருக்கும் போது தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் காவலில் இருந்ததால் ஒப்புதல் வாக்குமூலங்களை எங்களுக்கு ஏற்றவாறு தயார் செய்துகொண்டோம் என்றாலும் எதிரிகள் நான் குறிப்பிடுவது போல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து எந்த வித சான்று பொருட்கள் கைபற்றவில்லை என்றாலும் சான்று பொருட்கள் வழக்கிற்காக நாங்களே தயார் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. கொள்ளை என்பதற்கும் கூட்டு கொள்ளை என்பதற்கும் வித்யாசம் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு பதிவு செய்யும் போது கூட்டு கொள்ளை அடித்ததாக பதிவு செய்யப்பட்டது என்றால்

சரிதான். இரண்டு நபர்கள் கொள்ளை அடித்ததாக குறிப்பிடும் நிலையில் இவ்வழக்கு கூட்டு கொள்ளைக்காக பதிவு செய்யப்பட்டது தவறு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் தவறுதளாக புகார் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் எதிரிகள் மீது ஒரு பொய்யான இருதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து கைபற்றதாக கூறும் துப்பாக்கி எதிரிகளின் கைரேகை எடுத்து ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். அவ்வளவு நாட்கள் கைரேகை இருப்பதற்கு வாய்ப்பு இல்லை.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.